1970 மார்ச் 4]

அமைத்து, அதைப் பரிசிலனை செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கமிட்டி மூலம், இவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

பொதுவாக என்னுடைய தொகுதியில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக, பழைய ஏரிகள் பழுது அடைந்துபோயிருக்கின்றன. அவற்றை சர்வே செய்து, நிறைவேற்றிக் கொடுத்தால், உணவு உற்பத்தி பெருக வாய்ப்பாக இருக்கும்.

சட்ட மன்றத்திலே 1967-லிருந்து 1970 வரையில் ஒரு குற்றச்சாட்டை சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டோ, அமைச்சரோ அல்லது அதிகாரிகளோ, அதைக் கவனிக்கவில்லை. குறிப்பாக 1966-ம் ஆண்டில் புயலால் பாதிக்கப்பட்ட ஒரு கட்டடத்தைப் பழுது பார்க்க ரூ. 10,000-க்கு எஸ்டிமேட் தயார் செய்து, டெண்டர் கூப்பிட்டு, மூன்று ஆண்டுகளாகியும், கட்டடம் பூர்த்தி செய்ய அனுமதி வழங்கவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. அதைப்பற்றி 1967-ல் சொல்லியிருக்கிறேன். 1968-ல் சொல்லியிருக்கிறேன். 1969-ல் சொன்னேன். மறுபடியும் 1970-லும் சொல்லுகிறேன். அதேபோல, ஹைவேசில் போடப்பட்ட ரோடு பாதியில் நிற்கிறது. குட்டக்குளம் தொண்டாமுத்தூர் ரோடு கோவிந்தபட்டுவரை போகும் ரோடு பாதி வேலை செய்த பிறகு எடுத்தவர் இறந்துவிட்டார். இன்னும் 1970-வரையில் அதை ஆரம்பிக்கவில்லை. இந்த வேலை பற்றி நான்கு ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். எந்தவிதமான பதிலையும் கொடுக்கவில்லை. அக்கறையும் காட்டவில்லை. குறிப்பாக இன்னொரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். பல இடங்களில் பல கிராமங்களில் போக்குவரத்து வசதிகள் நீர்ப்பாசன வசதிகள், குடிநீர் வசதிகள் எதுவும் கிடையாது. இவற்றையெல்லாம் கவனிக்கத் தனியாக ஒரு குழு அமைத்து, ஆங்காங்கே உள்ள குறைகளை நிவர்த்திக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று, பேரவை நாளைக் காலை மீண்டும் 9 மணியளவில் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

(6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

159. Appropriation Accounts of the Government of Tamil Nadu for the year 1968–69 and Audit Report 1970. (*Laid on the Table of the House under Article* 151 (2) *of the Constitution of India*).

160. Finance Accounts of the Government of Tamil Nadu for the year 1968–69. [*Laid on the Table of the House under Article* 151 (2) *of the Constitution of India*].

B. *Reports, Notifications and other papers.*

'NIL'